**ஜூன் – 12**

**"இந்த ஒன்றை நான் செய்கிறேன்." - பிலி 3 : 13**

அப்போஸ்தலனுக்கடுத்த ஒரே ஒரு நோக்கத்தை நாம் இங்கு கவனிக்கிறோம். "இந்த ஒன்றை நான் செய்கிறேன்." அவன் பல காரியங்களை செய்யப் பிரயாசப்படவில்லை. அப்படி செய்திருந்தானானால், அவன் நிச்சயமாகவே தவறியிருப்பான். அவன் எந்த ஒரே நோக்கத்திற்காக அழைக்கப்பட்டனோ, அதை நிறைவேற்ற தன் ஜீவனை அர்ப்பணம் செய்தான். அந்த நோக்கத்திற்காகவே ஜீவியத்தில் மற்றெல்லா நோக்கத்தையும் விட்டுவிட்டான். தன் ஜீவியகாலமுழுவதும் தான் தெரிந்துகொண்ட போக்கு, சில நஷ்டங்களையும், துன்பம், வறுமை, பொருளில்லாக் கஷ்டம், உழைப்பு, கவலை, உபத்திரவம், தொடர்ச்சியான நிந்தனை ஆகியவைகளைக் கொண்டுவரும் என்ற உண்மையைக் கவனித்திருந்தும் கூட, அதையே செய்தான். இந்த ஒரே நோக்கத்தில் ஈடுபட்டிருந்ததினால், இந்த ஜீவியத்தின் நன்மையானவைகளில் சிலவற்றை அனுபவிக்கவோ அல்லது அதன் மாயையான நீர் குமிழிகளை நாடித்தேடவோ திரும்ப வேண்டுமென்கிற அநேக சோதனைகளிலிருந்து அவன் விடுவிக்கப்பட்டான்.

**- Z ’95, 250 (R 1884).**

ஒரே நோக்கத்தையுடையவர்களாயிருப்பதற்கு அப்போஸ்தலனாகிய பரி.பவுல் நமக்கு ஒரு மாதிரியாக இருக்கிறார். பலதரப்பட்ட இயற்கையான திறமைகளை உடையவராயிருந்ததினால், எல்லாவிதமான மகிழ்விக்கும் தூண்டுதல்களோடு தன் ஜீவியத்தின் இலக்காக எதை வைத்திருந்தானோ, அதைத்தவிர மற்ற நோக்கங்கள் அத்திறமைகளைப் பெற முயற்சித்தன. இந்த ஒன்றிலிருந்து மனதை வேறு வழியில் திருப்ப உடன்படாதிருந்த அவனுடைய குணத்தின் வலிமை நம்முடைய வியப்புக்கும் அந்த மாதிரியைப் பின்பற்றுவதற்கும் தகுதியாயிருக்கிறது. நாம் எல்லாவற்றையும் செய்யக் கற்றுக்கொள்ளக் கூடியவர்களாயிருக்க முடியாது. ஏதாவதொன்றில் வல்லவனாகவும் இருக்க முடியாது. "ஆற்றினுள் உருண்டு கொண்டே இருக்கிற கல் பாசி பிடியாது." என்ற பழமொழியை உணர்ந்து, இந்த ஒன்றை அடைய அதாவது, நமது அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்த, நம்முடைய எல்லா சக்திகளையும் ஒன்று திரட்டுவோமாக. **-P ’30, 78.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

1கொரி 2:2; மத் 10:42; லூக் 9:51,61,62; மாற் 10:45; யோவா 4:31-38; அப் 1:14; 2:1,46; 4: 24,32; 5:12; 21:10-15; ரோம 15:5,6; 2கொரி 13:11; பிலி 1:27; 3:18.

**கோபுரவாசிப்பு : Z ’01, 6 (R 2753)**

**வினாக்கள் :** நான் ஒரே நோக்கத்தை உடையவனாயிருக்கிறேனா? எனது நோக்கம் என்ன? நான் அதை எவ்வாறு காட்டுகிறேன்?